<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

ம.சா. 1 தேதி. 03.06.2025

| MCOP. No. | 45/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | ஐய்யப்பன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

எனக்கு விபத்து நடந்ததாக சொல்லப்படும் தேதி 07.03.2020 ஆகும். காலதாமதமாகத்தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 23.03.2020 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனது காலதாமதமாக கொடுத்த தகவலின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றபோது, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த வாகனம் மோதி விபத்து நடந்தது. ஆனால் மனுவில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த வாகனம் மோதியதாக கூறியது தவறு என்றால் அதுப்பற்றி தெரியாது. எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. எனது வருமானம் குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிச்சென்ற ஓட்டுநர் வாகனத்தை குடிபோதையில் வாகனத்தை ஓட்டிச்சென்றுள்ளார். குடிபோதையில் ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்தினால் காப்பீட்டு விதிமீறல் என்றால் சரிதான்.

எனது வயது, வருமானம், வேலை இழப்பு ஏற்ப நஷ்ட ஈடு கோராமல் அதிகமாக கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மருத்துவ செலவுகளுக்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்துக்கு நானும் ஒரு காரணம் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்றாலும், காப்பீடு விதிமீறல் உள்ளதாலும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.